செய்தி வெளியீடு எண்: 11/2021 நாள்: 22.10.2021

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் இணை இயக்குநராக (மக்கள் தொடர்பு) எல்.கிரிராஜன் பொறுப்பேற்றார்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் புதிதாக இணை இயக்குநராக (மக்கள் தொடர்பு) எல்.கிரிராஜன் பணி பொறுப்பேற்றுக் கொண்டார். இவருக்கு முன்பாக இந்நிறுவனத்தில் இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) அலுவலராக பணியாற்றி வந்த எஸ்.பாண்டியன் பதவி உயர்வு பெற்று சென்னை, தலைமைச் செயலகம், செய்தி மக்கள் தொடர்புத் துறையில் கூடுதல் இயக்குநராக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புதிதாத பொறுப்பேற்றுள்ள இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) எல்.கிரிராஜன் இதற்கு முன்பு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டம், தலைமை அலுவகத்தில் இணை இயக்குநராக பணியாற்று வந்த நிலையில் பணியிடமாற்றம் செய்யப்பட்டு தற்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

22.10.21.

வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.